Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 52 | உள்ளூர் - 21.02.2026 | சனி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 52 | வெளியூர் - 22.02.2026 | ஞாயிறு | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**மரணத்தை வெல்லும் உணவுகள்..!! சித்தர்கள் ரகசியம்..!!**

**அக்னிவீர் காலியிடங்கள்: சென்னை, கோவை, திருச்சி**

**மதுரையில் முதல்வர் உற்சாக வரவேற்பு!**

**எதிரிக்கு எதிரி நண்பன்: ஓபிஎஸ்**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மதுரை மாவட்டம், வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் விரிவுப்படுத்தப்பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையக் கட்டடத்தை திறந்து வைத்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன். நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெங்கடேசன், மு. பூமிநாதன், காதர்பாட்சா முத்துராமலிங்கம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவநீத், எல்காட் மேலாண்மை இயக்குநர் கா.ப.கார்த்திகேயன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், பினாகிள் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் பிமல் பட்வாரி. இயக்குநர் ஸ்பனா பட்வாரி, உலகளாவிய தலைவர் டாக்டர் உமா மகேஸ்வரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரையில் முதல்வர் ஸ்டாலின்... தொண்டர்கள் உற்சாக வரவேற்பு!



மதுரை, பிப். 21–

மதுரையில் (பிப். 21) நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரை வந்த முதல்வர் ஸ்டாலினிக்கு திமுக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மதுரை உத்தங்குடியில் நடைபெறும் திமுக தென் மண்டல பாக முகவர்கள், வாக்குச் சாவடி குழு உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்கவும், தமிழக அரசு சார்பில் நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கவும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சிறப்பு விமானம் மூலம் சனிக்கிழமை காலை மதுரை வந்தார்.

அங்கு முதல்வர் ஸ்டாலினுக்கு மதுரை மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் திமுக நிர்வாகிகள், திரளான தொண்டர்கள் கட்சி கொடியுடன் பங்கேற்று முதல்வர் ஸ்டாலினை வரவேற்றனர்.

பின்னர், மதுரை விமான நிலையத்திலிருந்து காரில் புறப்பட்டு, வடபழஞ்சியில் உள்ள எல்காட் தொழில்நுட்பப் பூங்காவுக்கு சென்றார். அங்கு, 'பின்னாகிள்' நிறுவனத்தின் திறன் மேம்பாட்டு மைய கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

பிறகு, அங்கிருந்து தமுக்கம் பகுதிக்கு செல்லும் முதல்வர், தமுக்கம்–நெல்பேட்டை அண்ணா சிலை வரை 1.3 கி.மீ தொலைவுக்கு ரூ. 190.4 கோடியில் கட்டப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உயர்நிலைப் பாலத்தை திறந்துவைக்கிறார்.

இதையடுத்து, சிவகங்கையில் புதிதாக அமைக்கப்பட்ட மருது சகோதரர்களின் உருவச் சிலைகளை காணொலி வாயிலாக முதல்வர் திறந்துவைக்கிறார்.

இதனைத் தொடர்ந்து, மதுரை ஸ்ரீமீனாட்சி அரசு மகளிர் கல்லூரியில் மேம்படுத்தப்பட்ட கணினி ஆய்வகத்தைத் தொடங்கிவைக்கிறார். பிறகு, அங்கிருந்து வண்டியூர் புறப்படும் முதல்வர், பிற்பகல் 1.05 மணிக்கு சீரமைக்கப்பட்ட வண்டியூர் கண்மாய் பூங்கா, ஆங்குரன் அறிவியல் மையம், பேரூராட்சிகளின் புதிய அலுவலகக் கட்டடம், 867 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். இதையடுத்து, மாலை 4 மணிக்கு மதுரை உத்தங்குடியில் நடைபெறும் திமுக தென் மண்டல பாக முகவர்கள், வாக்குச் சாவடி குழு உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகிறார்.

# எழும்பூரில் இருந்து புறப்படும் 8 எக்ஸ்பிரஸ் ரெயில்கள் மாம்பலத்தில் நின்று செல்லும் - தெற்கு ரெயில்வே!


சென்னை, பிப். 21–

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதால், நடைமேடை 10 மற்றும் 11–ல் இயக்கப்பட்ட மின்சார ரெயில்கள் அனைத்தும், எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இயக்கப்படும் 5 மற்றும் 6–வது நடைமேடைக்கு மாற்றப்பட்டுள்ளன. நேற்று முதல் ஏப்ரல் 5–ந்தேதி வரை (45 நாட்கள்) இந்த மாற்றம் அமலில் இருக்கும் என தெற்கு ரெயில்வே அறிவித்து இருந்தது.

அதன்படி, சென்னை கடற்கரையில் இருந்து தாம்பரம், செங்கல்பட்டு செல்லும் ரெயில்கள் 6–வது நடைமேடையில் இருந்தும். மறுமார்க்கமாக வரும் ரெயில்கள் 5–வது நடைமேடையில் இருந்தும் இயக்கப்பட்டன.

சுமார் 40 மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்பட்டதால், வழக்கமாக 10 நிமிடங்களுக்கு ஒருமுறை வரும் மின்சார ரெயில்கள், 20 முதல் 30 நிமிடங்கள் வரை தாமதமாக வந்தன.

எக்ஸ்பிரஸ் ரெயில் பாதையில் இயக்கப்பட்ட மின்சார ரெயில்கள், சேத்துப்பட்டு கிராசிங்கில் உள்ள ஒரு வழித்தடத்தில் இருமார்க்கத்திலும் நின்று, ஒரு ரெயில் வந்த பின்னரே எதிர் திசையில் இருந்து வந்த மற்றொரு ரெயில் அந்த வழித்தடத்தில் செல்ல முடிந்தது. இதனால், பல்வேறு மின்சார ரெயில்கள் ஆங்காங்கே தண்டவாளத்திலேயே நிறுத்தப்பட்டன.



SOUTHERN RAILWAY
No.799/2025-26

PRESS RELEASE
21.02.2026

Temporary Stoppage at Mambalam Station for Express Trains

In connection with line block/power block on Road Nos.10 & 11 at Chennai Egmore Yard from 20.02.2026 to 05.04.2026 undertaken as part of ongoing station redevelopment works, the following trains will be provided with an additional stoppage at Mambalam Station for the convenience and benefit of passengers as detailed below:

| Sl No | Train No. & Description | Timings at Mambalam (Arrival / Departure) | With Effect From - To | Frequency |
|---|---|---|---|---|
| 1 | Train No. 22675 Chennai Egmore – Tiruchchirappalli Chozhan Superfast Express | 08.13/08.15 | 22.02.2026 to 06.04.2026 | Daily |
| 2 | Train No. 12633 Chennai Egmore – Kanniyakumari Superfast Express | 17.33/17.35 | | |
| 3 | Train No. 16115 Chennai Egmore – Puducherry Express | 18.23/18.25 | | |
| 4 | Train No. 12661 Chennai Egmore – Sengottai Pothigai Superfast Express | 19.48/ 19.50 | | |
| 5 | Train No. 12631 Chennai Egmore – Tirunelveli Nellai Superfast Express | 21.03/ 21.05 | | |
| 6 | Train No. 12637 Chennai Egmore – Madurai Pandian Superfast Express | 21.53/ 21.55 | | |
| 7 | Train No. 16179 Chennai Egmore – Mannargudi Express | 23.08/ 23.10 | | |
| 8 | Train No. 22153 Chennai Egmore – Salem Superfast Express | 00.08/ 00.10 | | |

இதனால், வேலை மற்றும் பள்ளி–கல்லூரிகளுக்கு செல்பவர்கள் என அனைத்து தரப்பு பயணிகளும் கடும் அவதிக்கு உள்ளாகினர்.

சுமார் 40 மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்பட்டதால், வழக்கமாக 10 நிமிடங்களுக்கு ஒருமுறை வரும் மின்சார ரெயில்கள், 20 முதல் 30 நிமிடங்கள் வரை தாமதமாக வந்தன. எக்ஸ்பிரஸ் ரெயில் பாதையில் இயக்கப்பட்ட மின்சார ரெயில்கள், சேத்துப்பட்டு கிராசிங்கில் உள்ள ஒரு வழித்தடத்தில் இருமார்க்கத்திலும் நின்று, ஒரு ரெயில் வந்த பின்னரே எதிர் திசையில் இருந்து வந்த மற்றொரு ரெயில் அந்த வழித்தடத்தில் செல்ல முடிந்தது.

பல்வேறு மின்சார ரெயில்கள் ஆங்காங்கே தண்டவாளத்திலேயே நிறுத்தப்பட்டன. இதனால், வேலை மற்றும் பள்ளி–கல்லூரிகளுக்கு செல்பவர்கள் என அனைத்து தரப்பு பயணிகளும் கடும் அவதிக்குள்ளாகினர். பராமரிப்பு பணியின் முதல் நாளிலேயே சென்னை மக்கள் சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளாகி உள்ளனர்.

இந்நிலையில் சென்னை எழும்பூரில் இருந்து புறப்பட்டுச் செல்லும் 8 எக்ஸ்பிரஸ் ரெயில்கள் நாளை முதல் மாம்பலத்திலும் நின்று செல்லும் என்று தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

எழும்பூரில் இருந்து புறப்படும் திருச்சி சோழன் எக்ஸ்பிரஸ் ரெயில், கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரெயில், நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயில், செங்கோட்டை பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில், மதுரை பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரெயில், மன்னார்குடி எக்ஸ்பிரஸ் ரெயில் மற்றும் சென்னை எழும்பூர் – புதுச்சேரி எக்ஸ்பிரஸ் ரெயில், சேலம் எக்ஸ்பிரஸ் ரெயில் மாம்பலத்தில் நாளை முதல் ஏப்.6 வரை நின்று செல்லும். மாம்பலத்தில் நிற்கும் இந்த எக்ஸ்பிரஸ் ரெயில்கள் பயணிகளை ஏற்றிச்செல்லும் என்று தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

சென்னை எழும்பூரில் மேம்பாட்டுப் பணிகள் நடப்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 'ரெசிப்ரோக்கல் வரி' செல்லாது

# ஆப்படித்த அமெரிக்கா உச்ச நீதிமன்றம்... அனைத்து நாடுகளுக்கும் புதிதாக 10% வரி

## அமல்படுத்திய டிரம்ப்!






அமெரிக்கா, பிப். 21–

உலகில் உள்ள பல நாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் பரஸ்பர வரி விதித்தார். ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாவதால் ஏற்படும் வர்த்தகப் பற்றாக்குறையைக் கையாளும் வகையில், இந்த வரி விதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்.

உலக நாடுகள் மீதான இந்தப் பரஸ்பர வரி உள்பட அமெரிக்க அவசர அதிகா ரங்கள் சட்டத்தின் கீழ், டிரம்ப் விதித்த வரிகளுக்கு எதிராக அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் அந்நாட்டு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியினர், வணிகர்கள் உள்பட பலர் வழக்கு தொடுத்தனர்.

அமெரிக்காவில் அவசர காலங்களில் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த 1977–ஆம் ஆண்டின் அமெரிக்க சட்டம் அதிபருக்கு அதிகாரமளித்துள்ளதா கவும், அதில் அதிபருக்கு வரி விதிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு நீதித்துறை வாதிட்டது. ஆனால், அந்தச் சட்டத்தில் இறக்குமதி பொருள்கள் மீது வரி விதிப்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை என்று வழக்கு தொடுத்தவர்கள் வாதிட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அமர்வு வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது. அந்த அமர்வில் 6 நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், 'வரி விதிக்கும் அதிகாரத்தை அமெரிக்க நாடாளுமன்றத்துக்குத்தான் அரசமைப்புச் சட்டம் மிகத் தெளிவாக வழங்கியுள்ளது. அரசமைப்புச் சட்டத்தை வகுத்தவர்கள் அந்த அதிகாரத்தை அரசு நிர்வாகத்துக்கு அளிக்கவில்லை. எனவே டிரம்ப்பின் வரி விதிப்புகள் செல்லாது'என்று தீர்ப்பளித்தனர்.

அதேவேளையில், அமர்வில் இடம்பெற்ற 3 நீதிபதிகள், 'தற்போதைய வரி விதிப்புகள் அறிவார்ந்த கொள்கையாக இருக்கலாம் அல்லது அறிவார்ந்த கொள்கையாக இல்லாமலும் போகலாம். ஆனால், வரலாறு மற்றும் கடந்த கால நடவடிக்கைகள், முடிவு களைக் கருத்தில் கொள்ளும்போது, டிரம்ப்பின் வரி விதிப்புகள் சட்டபூர்வமானவைதான்'என்று தெரிவித்தனர். இதையடுத்து பெரும்பான்மை அடிப்படையில், டிரம்ப்பின் வரி விதிப்பு செல்லாது என்று 6 நீதிபதிகள் அளித்த தீர்ப்பு இறுதி செய்யப்பட்டது.

**புதிதாக 10% வரி விதிப்பு அமல்படுத்திய டிரம்ப்**

அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை "பயங்கரமான முடிவு" என்று குறிப்பிட்ட டிரம்ப், 1974 ஆம் ஆண்டின் வர்த்தகச் சட்டத்தின் பிரிவு 122 இன் கீழ் அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய அனைத்து நாடுகளுக்கும் மேலும் 10 சதவீதம் வரி விதிக்கும் உத்தரவில் கையெழுத்திட்டதாகவும், 10 சதவீதம் வரி விதிப்பில் கையெழுத்திட்டது மிகவும் பெருமையாக உள்ளதாகவும், இந்த வரிவிதிப்பு உடனடியாக அமலுக்கு வரும். இந்த விவகாரத்தில் அனைவரின் கவனத்திற்கு நன்றி என டிரம்ப் கூறியுள்ளார். மேலும், இந்தியாவுக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்பில் எவ்வித மாற்றமும் இருக்காது எனத் தெரிவித்த டிரம்ப், இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என கூறியுள்ளார்.

வேறொரு அதிகாரம் செயல்படுத்தப்படும் வரை இந்த புதிய வரி அமலில் இருக்கும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார், அமெரிக்க வர்த்தக ஒப்பந்தங்களுக்கு அமெரிக்கா வுடன் வர்த்தகம் செய்யும் அனைத்து நாடுகளும் கட்டுப்பட வேண்டும் என்றும் அந்த அதிகாரி அறிவுறுத்தினார்.

அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பால் ஏற்பட்ட சட்டப்பூர்வ தோல்வியைத் தொடர்ந்து, அதிபர் டிரம்ப் அனைத்து நாடுகளுக்கான 10 சதவீத வரிகள் "உடனடியாக அமலுக்கு" வருவதாக அறிவித்துள்ள நிலையில், அமெரிக்க டாலரின் மதிப்பு சரிவைச் சந்தித்தது. அதே நேரத்தில் தீர்ப்பு காரணமாக அந்நாடு மற்றும் ஐரோப்பாவின் பங்குச்சந்தைகள் எழுச்சி அடைந்தன. இரும்பு, அலுமினியம், தினசரி நுகர்வு உள்ளிட்ட பொருட்களின் விலையும் கணிசமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.





மதுரை தமுக்கத்தில் ரூ.214 கோடி மதிப்பில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பெயரிலான புதிய மேம்பாலம் திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை IG கி.மீ நீளத்திற்கு புதிய மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. சிவகங்கையில் ரூ.1 கோடியில் கட்டப்பட்டுள்ள மருது சகோதரர்கள் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 21.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 09-ம் தேதி

## தங்கத்தில் முதலீடு செய்தால் லாபம் அள்ள முடியுமா..?



தங்கம் விலை தொடர்ந்து ஏற்ற இறக்கத்தை எதிர்கொண்டு வரும் காரணத்தால் முதலீட்டாளர்கள் பெரும் குழப்பத்தில் உள்ளனர். இதனால் தங்கத்தில் எப்போது முதலீடு செய்ய வேண்டும் என்பதை முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும். அதாவது தங்கம் விலை தொடர்ந்து குறையும்போது வாங்குவதை காட்டிலும், தங்கம் விலை சரிவில் இருந்து நிலைபெற்ற பின்பும், உயரும் தருவாயில் வாங்கும் போது தான் தங்கம் முதலீட்டில் லாபம் பார்க்க முடியும். இந்த உயரும் தருவாயை கண்டறிய உள்நாட்டு விவகாரம் முதல் வெளிநாட்டு விவகாரம் வரையில் கண்காணிக்கப்பட வேண்டும். பங்குகளை ஒரிரு காரணிகள் அடிப்படையில் தங்கம் விலை உயராது, தங்கம் விலை உயர்வுக்கு பல்வேறு காரணங்கள் உள்ளது, ரூபாய் மதிப்பில் துவங்கி அமெரிக்க வேலைவாய்ப்பு சந்தை, உலக நாடுகள் மத்தியில் போர் வரையில் தங்கத்திற்கு தொடர்பு உள்ளது.

ஈரான்–அமெரிக்கா பதற்றம் ஈரான் மீது அமெரிக்கா இந்த வார இறுதியில் தாக்குதல் நடத்தலாம் என்று சில செய்தி வெளியிட்டுள்ளன. இது உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும், ஜியோபாலிடிக்ஸ் பதற்றம் தங்கம் போன்ற பாதுகாப்பு சொத்துக்களுக்கு தேவையை அதிகரிக்கிறது. இதேவேளையில் அமெரிக்கா அரசு ஈரானுக்கு அணுசக்தி ஒப்பந்தத்தில் 2 வார கால அவகாசம் கொடுத்துள்ளது.

அமெரிக்க அதிபர் டிரம்பின் அணு ஒப்பந்தம் தொடர்பான அச்சுறுத்தல்களும் சந்தையில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய போர் சூழலிலும், அச்சமும் தங்க விலை உயர்வுக்கு நல்ல சிக்னலாக அமைந்துள்ளது. அமெரிக்க வட்டி குறைப்பு அமெரிக்காவில் வாராந்திர வேலைவாய்ப்பு கோரிக்கை (jobless claims) தரவு ஐந்து வார குறைந்த அளவை எட்டியுள்ளது. இது அமெரிக்க தொழிலாளர் சந்தை நிலையாக இருப்பதை காட்டுகிறது. இதனால் பெடரல் ரிசர்வ் வட்டி விகித குறைப்பு எதிர்பார்ப்பு சற்று குறைந்துள்ளது.

மேலும் CME FedWatch கருவியின்படி, ஜூன் மாத கூட்டத்தில் வட்டி குறைப்பு வாய்ப்பு 50%ஆக உள்ளது. ஜனவரி FOMC கூட்ட குறிப்புகள் அதிகாரிகள் இடையே கருத்து வேறுபாடு இருப்பதை வெளிப்படுத்தியுள்ளன. சிலர் பணவீக்கம் குறைந்தால் குறைப்பு செய்யலாம் என்றும், மற்றவர்கள் விலை அழுத்தம் தொடர்ந்தால் உயர்த்தலாம் என்றும் கூறியுள்ளனர். இதனால் கெவின் வார்ஷ் வந்தாலும் வட்டி குறைப்புக்கான வாய்ப்பும், எண்ணிக்கையும் குறைவாக தான் இருக்கும் என முதலீட்டு சந்தையில் கருத்து நிலவுகிறது.

டாலர் – ரூபாய் மதிப்பு டாலர் இன்டெக்ஸ் 98ஐ எட்டியுள்ளது. இது நான்காவது நாளாக உயர்ந்து வருகிறது. இந்த வாரம் 1%க்கும் மேல் உயர்வு கண்டுள்ளது. இதனால் இந்திய ரூபாய் மதிப்பு சரிந்துள்ளது. இது தங்கம், வெள்ளி விலையை இந்தியாவில் பாதிக்கும் ஒரு காரணியாக உள்ளது.

மொத்தத்தில், தங்கம் விலை ஈரான் – அமெரிக்கா மத்தியிலான போர் பதற்றம் மற்றும் பெடரல் ரிசர்வ்–ன் வட்டி குறைப்பு எதிர்பார்ப்புக்கு மத்தியில் தடுமாறி வருகிறது. ஈரான்–அமெரிக்கா அச்சம், சீனா தங்கம் கொள்முதல் விலை உயர்வுக்கு வழிவகுக்கலாம். இன்று வெளியாகும் அமெரிக்காவின் வேலைவாய்ப்பு தரவு, PCE பணவீக்க அறிக்கை ஆகியவை மேலும் தெளிவு அளிக்கும்.

## செய்திகள் சில வரிகளில்...!

o சட்டப்பேரவை தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு குறித்து திமுக உடன் பேச்சுவார்த்தை நடத்த 4 பேர் கொண்ட குழுவை அமைத்தது மதிமுக.

o திருச்சியில் நாம் தமிழர் கட்சியின் சார்பில், மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு சீமான் தலைமையில் இன்று நடைபெற உள்ளது. தமிழ்நாட்டின் 234 தொகுதிகளுக்குமான வேட்பாளர்கள் ஒரே மேடையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளனர்.

o வடகிழக்கு மாநிலத்தில் உள்ள மாணவர்கள், குறிப்பாக பெண்களுக்கு தமிழ்நாட்டில் படிக்க வாய்ப்பு கிடைத்தால், பெற்றோர்கள் வருத்தம் இல்லாமல் நிம்மதியாக இருக்கிறார்கள் என, தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு குறித்து ஆளுநர் ஆர்.என். ரவி புகழாரம்.

o சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,080 உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமிற்கு ரூ.260 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,680–க்கும் ஒரு சவரன் ரூ.1,17,440–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளியின் விலை கிராமிற்கு ரூ.20 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.290–க்கு விற்பனை.

o தெற்கு ரயில்வே அறிவிப்பின்படி, உதகை மலை ரயிலின் டிக்கெட் கட்டண உயர்வு இன்று முதல் அமலுக்கு வருகிறது. முதல் வகுப்பு சாதாரண கட்டணம் ரூ.520–ல் இருந்து ரூ.550–ஆகவும், முன்பதிவு முதல் வகுப்பு ரூ.600–ல் இருந்து ரூ.630–ஆகவும் உயர்வு.

## ஆயிரம் விளக்கில் ஸ்டாலின் போட்டியிட விருப்ப மனு!



சென்னை, பிப். 21–

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் முதல்வர் ஸ்டாலின், சேப்பாக்கத்தில் துணை முதல்வர் உத யநிதி, திருச்செந்துாரில் தி.மு.க., துணைப் பொதுச்செயலர் கனிமொழி ஆகியோர் போட்டியிட, தி.மு.க.,வினர் விருப்ப மனு அளித்தனர். சட்டசபை தேர்தலில், தி.மு.க., சார்பில் போட்டியிடுவோரிடம் விருப்ப மனு பெறும் பணி, தி.மு.க., தலைமை அலுவலகத்தில் நேற்று துவங்கியது. தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், 1,000 ரூபாய் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்றனர். பொதுத் தொகுதிகளில் போட்டி யிட, விண்ணப்பக் கட்டணமாக 25,000 ரூபாய்; தனித் தொகுதிகளில் போட்டியிட 15,000 ரூபாய் என கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விருப்ப மனுவில், கட்சியில் வகிக்கும் பொறுப்பு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வேறு அமைப்புகளில் வகிக்கும் பதவி, கட்சி போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றது உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் முதல்வர் ஸ்டாலின், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் துணை முதல்வர் உதயநிதி, திருச்செந்துார் தொகுதியில் கனிமொழி ஆகியோர் போட்டியிட, கட்சியினர் விருப்ப மனு அளித்தனர்.

## மார்ச் 31-ல் சீனா செல்கிறார் அதிபர் டிரம்ப்: அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திக்கிறார்!




வாஷிங்டன், பிப். 21–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த 4–ம் தேதி அன்று சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் தொலைபேசியில் உரையாடினார். அப்போது, அதிபர் டிரம்ப் மற்றும் அவரது மனைவியை சீனா வரவேண்டும் என அதிபர் ஜி ஜின்பிங் கேட்டுக் கொண்டார். இந்நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப் மார்ச் 31–ம் தேதி சீனா புறப்பட்டுச் செல்ல திட்டமிட்டுள்ளார். ஏப்ரல் 2–ம் தேதி வரை சீனாவில் பயணம் மேற்கொள்கிறார்.

சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்திப்பதற்காக அதிபர் டிரம்ப் ஏப்ரல் மாதம் பீஜிங் செல்வதாகத் தகவல் வெளியானது.

இதுதொடர்பாக அமெரிக்க ஊடகத்திற்கு அதிபர் டிரம்ப் அளித்த பேட்டியில், உலகின் சக்திவாய்ந்த இரு நாடுகளுக்கும் இடையில் நல்ல நட்புறவு உள்ளது என தெரிவித்தார்.

## டெல்லி செங்கோட்டை, கோவில்களுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல்; உளவு துறை எச்சரிக்கை!



புதுடெல்லி, பிப். 21–

டெல்லியில் சாந்தினி சவுக் பகுதியில் உள்ள மத வழிபாட்டு தலங்கள் (கோ வில்கள்), வரலாற்று பிரசித்தி பெற்ற செங்கோட்டை அருகே பயங்கரவாத தாக்கு தல் நடத்துவதற்கான சாத்தி யம் உள்ளது என உளவு துறை எச்சரிக்கை விடுத்து ள்ளது. பாகிஸ்தானை அடிப்ப டையாக கொண்ட லஷ்கர்–இ–தொய்பா பயங்கரவாத அமைப்பின் கண்காணிப்பின் கீழ் இவை தொடர்ந்து உள்ளன. இதன்படி சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை பயன்படுத்தி தாக்குதல் நடத்த சதி திட்டம் தீட்டப்பட்டு உள்ளது. கோவிலும் கடுமையாக தாக்குதலுக்கு ஆளாகலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தா னின் இஸ்லாமாபாத் நகரில் மசூதி ஒன்றில் கடந்த 6–ந்தேதி நடந்த பயங்கரவாத தாக்கு தலுக்கு பழிக்கு பழியாக இந்த தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டு உள்ளனர் என உளவு துறை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் 10–ந்தேதி டெல்லி செங்கோட்டை மெட்ரோ நிலையம் அருகே நடந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் சிக்கி 12 பேர் பலியானார்கள். அருகே நிறுத்தி இருந்த பல்வேறு வாகனங்களும் தீயில் எரிந்து விட்டன.

## உதயநிதி, கமல், விஜய் உள்ளிட்டோர் வீடுகள் விதி மீறி கட்டப்பட்டு உள்ளனவா: ஐகோர்ட் அதிரடி உத்தரவு!



உதயநிதி கமல் விஜய்

சென்னை, பிப். 21–

சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள விதிமீறல் கட்டடங்களுக்கு எதிரான நடவடிக்கையை எதிர்த்து தாக்கல் செய்ய ப்பட்டு உள்ள மேல்முறையீ டுகளை, வரும் மே மாதத்து க்குள் விசாரித்து முடிக்க வேண்டும் என, தமிழக அரசுக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு ள்ளது. சென்னை கிழக்கு கடற்கரை சாலையில், நீலாங்கரை முதல் உத்தண்டி வரையிலான பகுதிகளில், கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிகளுக்கு முரணாக, கடற்கரையில் இருந்து, 500 மீட்டர் துாரத்துக்குள் பங்களாக்கள், ரிசார்ட்கள் கட்டப்பட்டுள்ளன. விதிகளை மீறி இந்த கட்டடங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகளில், சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், கடந்த 2018ம் ஆண்டு, 798 கட்டட உரிமையாளர்களுக்கு எதிராக, மாநகராட்சி நோட்டீஸ் அனுப்பியது.

இதில், துணை முதல்வர் உதயநிதி, மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோ ரும் அடங்குவர். ஆறு ஆண்டுகள் இடைவெளிக்கு பின், இந்த வழக்குகள் நீதிபதிகள் அனிதா சுமந்த், எம்.சுதிர்குமார் அடங்கிய அமர்வில் மீண்டும் விசார ணைக்கு வந்தன. அப்போது, தமிழக அரசு தரப்பில், மாநகராட்சி நோட்டீசை எதிர்த்து, 798 உரிமையா ளர்களில் 440 பேர் அரசிடம் மேல்முறையீடு செய்து உள்ளனர். இதில், 84 மேல்முறையீடுகள் முடித்து வைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள மேல் முறையீடுகள் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதை கேட்ட நீதிபதிகள், மீதமுள்ள மேல் முறையீட்டு மனுக்கள் குறித்து, கட்டட உரிமையாளர்கள் தரப்பு விளக்கம் அளிக்க, மார்ச் 30 வரை அவகாசம் வழங்கினர். பின், விசாரணை நடத்தி, வரும் மே 31க்குள் முடிவெ டுக்க வேண்டும் என உத்த ரவிட்டு, விசாரணையை பிப்.,27ம் தேதிக்கு தள்ளி வைத்தனர். முன்னதாக, 'சென்னை யின் நீண்ட கடற்கரை, அரிய வகை ஆமைகள் இனப்பெருக்கம் செய்வதால், இப்பகுதியின் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியது முக்கியம். எனவே, உத்தண்டிக்கு அப்பால் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்கள் குறித்தும் கணக்கெடுப்பு நடத்த வேண்டும்' என, வழக்கில் நீதிமன்றத்துக்கு உதவியாக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் கேட்டுக் கொண்டார்.

## பிப். 24 முதல் பல்வேறு கட்ட போராட்டங்கள்; பல்கலை ஆசிரியர்கள் முடிவு!



மதுரை, பிப். 21–


அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்களுக்கு பணி மேம்பாட்டு ஊதியம் வழங்கக்கோரி தொடர் போராட்டம் நடந்து வரும் நிலையில், பிப். 24 முதல் அடுத்தகட்ட போராட்டம் நடத்த பல்கலை ஆசிரியர்கள் சங்கம் (ஏ.யு.டி.,), மதுரை காமராஜ், மனோன்மணியம் சுந்தரனார், அன்னை தெரசா, அழகப்பா பல்கலை ஆசிரியர்கள் சங்கம் (மூட்டா) முடிவெடுத்துள்ளன.

தமிழகத்தில் உள்ள பல்கலை, கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணி மேம்பாட்டிற்காக தமிழக உயர்கல்வித்துறை சார்பில் 2021 ஜன. 11ல் அரசாணை வெளியிட ப்பட்டது. அதன்படி, அரசுக் கல்லூரிபேராசிரியர்களுக்கு பணிமேம்பாட்டு ஊதியம், நிலுவைத்தொகையுடன் வழங்கப்பட்டது.

அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கான 8 மண்டலங்களில் கோவை, தஞ்சை மண்டலங்களில் மேம்பாட்டு ஊதியம் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. சென்னை உள்ளிட்ட 6 மண்டலங்களில் மேம்பாட்டு ஊதியம், நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. இதனால் ஆய்வு மாணவர்களை கூடுதலாக பேராசிரியர்கள் சேர்க்க முடியாமல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற மாணவர்கள் பி.எச்டி., பெறும் வாய்ப்பை இழந்து வருகின்ற னர். ஐந்து ஆண்டுகளாக ஏ.யு.டி., மூட்டா அமைப்புகள் பல போராட்டங்களை நடத்திய நிலையில் உயர்க்க ல்வித்துறை அமைச்சகம் சார்பில்பணி மேம்பாடு வழங்கப்படும் என 3 முறை உறுதியளிக்க ப்பட்டது. எனினும்இதுவரை பலன்கள் வழங்கப்பட வில்லை. மதுரையில் மூட்டா பொதுச் செயலாளர் செந்தாமரைக் கண்ணன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி, ஏ.யூ.டி., பொதுச்செயலாளர் சேவியர் செல்வகுமார் கூறியதாவது:

அரசு, அரசு உதவிபெறும் கல்லூரி எனும் பாகுபாட்டை தவிர்த்து அரசாணைப்படி அனைத்து கல்லூரி பேராசிரியர்களுக்கும் பணிமேம்பாட்டு ஊதியத்தை நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டும். இல்லாவிடில் தமிழகம் முழுதும் பிப்.24ல் கல்லூரி வாயில்கள் முன் மனிதச்சங்கிலி, பிப்.26ல் கல்லூரிக் கல்வி இணை இயக்குநரிடம் ஆணையின் நகலை திரும்ப வழங்குதல், பிப். 28ல் சாலை மறியல், மார்ச் 5 முதல் சென்னை கல்லூரி கல்வி இயக்குநர் அலுவலகத்தில் தொடர் காத்திருப்பு உள்ளிட்ட போராட்டங்கள் நடத்தப்படும்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இன்று (பிப்.21) முதல் 3 நாட்கள் அகில இந்திய பல்கலை, கல்லூரி ஆசிரியர் சங்கம் சார்பில் மாநாடு நடத்தப்படுகிறது. கல்வியாளர்கள், அமை ச்சர்கள், அரசியல் தலைவ ர்கள், பிரதிநிதிகள் பங்கே ற்கின்றனர். உயர்க்கல்வித் துறையில் உள்ள அனைத்து பிரச்னைகள் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றனர்.



## மரணத்தை வெல்லும் உணவுகள்..!! சித்தர்கள் ரகசியம்..!!



நீண்ட ஆயுளோடும், நோய் நொடி இல்லாமலும் வாழ்வது என்பது இன்றைய அவசர உலகில் பெரும் சவாலாகவே உள்ளது. ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நமது சித்தர்கள், ஓலைச்சுவடிகள் மற்றும் பாடல்கள் வாயிலாக மனிதன் 100 ஆண்டு காலம் ஆரோக்கியமாக வாழ்வதற்கான உணவு முறைகளை வகுத்துச் சென்றுள்ளனர். ''உணவே மருந்து'' என்ற கோட்பாட்டின் அடிப்படையில், ஒரு மனிதன் எப்போது, எதை, எப்படி உண்ண வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர். அந்தப் பழமையான மருத்துவ அறிவியலின் சாராம்சத்தை இங்கே காண்போம்.

காலையில் கண் விழித்ததும் காபி, டீ போன்ற பானங்களுக்கு அடிமையாகாமல், துளசி அல்லது சித்தரத்தை கொண்டு தயாரிக்கப்பட்ட தேநீரை அருந்துவது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைப் பன்மடங்கு அதிகரிக்கும் எனச் சித்த மருத்துவம் வலியுறுத்துகிறது.

''காலையில் இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலையில் கடுக்காய்'' என்பது சித்தர்களின் பிரசித்தி பெற்ற வாக்கியம். இந்த முறையில் இஞ்சி, சுக்கு, கடுக்காயை ஒரு மண்டலம் (48 நாட்கள்) தொடர்ந்து உட்கொண்டு வந்தால், உடலில் உள்ள நச்சுகள் வெளியேறி, செரிமானம் சீராகி உடல் புத்துணர்ச்சி பெறும்.

நமது பாரம்பரிய உணவான ரசத்தை வெறும் சுவைக்காக மட்டும் சித்தர்கள் பரிந்துரைக்கவில்லை. கொள்ளு, தூதுவளை, வேப்பம்பூ போன்ற மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் ரசம் உடலுக்கு அபரிமிதமான பலத்தைத் தரும். அதேபோல், ''மூத்த தயிர் உண்போம்'' என்ற வாக்கிற்கேற்ப, நன்கு உறைந்த தயிரை உணவில் சேர்த்துக் கொள்வது குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களை வளர்த்து, இதய நோய்கள் வராமல் தடுக்கிறது. மேலும், நிலத்தடியில் விளையும் கிழங்கு வகைகள் மற்றும் காய்கறிகள் எலும்பு, தசை, சருமத்தைப் பலப்படுத்தும் 'மண் சார்ந்த உணவுகள்' என அழைக்கப்படுகின்றன. இரத்த அழுத்தத்தையும் பித்தத்தையும் சமநிலையில் வைக்க நீர்ச்சத்து நிறைந்த வெள்ளரி, பூசணி போன்ற காய்கறிகளை அதிகம் எடுத்துக் கொள்வது அவசியம்.

உணவு எவ்வளவு ருசியாக இருந்தாலும், வயிறு முட்ட உண்பது ஆரோக்கியத்திற்கு உலை வைக்கும் செயலாகும். வயிற்றில் பாதி அளவு உணவு, கால் பங்கு தண்ணீர் எனப் பிரித்து, மீதமுள்ள கால் பங்கை காற்று செல்வதற்காக விட வேண்டும் எனச் சித்தர்கள் கூறியுள்ளனர். மேலும், முறையான பசி எடுத்த பின்னரே உணவை உட்கொள்ள வேண்டும். காலை கடன்களை முடிக்காமல் உண்பது உடலுக்குத் தீங்கானது. மிக முக்கியமாக, தேன் மற்றும் நெய்யைச் சம அளவில் கலந்து உண்பதோ, வாழைப்பழத்துடன் தயிர் அல்லது மோரைச் சேர்த்துச் சாப்பிடுவதோ 'விருத்த ஆகாரம்' எனப்படும் முரணான உணவுச் சேர்க்கையாகும்.

இவற்றைத் தவிர்ப்பது விஷத்தன்மை உடலில் சேருவதைத் தடுக்கும். ஒருவேளை ருசிக்காக அதிகமாகச் சாப்பிட்டுவிட்டால், அன்றைய தினமே நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி மூலம் அதைச் சமன் செய்ய வேண்டும். ஆரோக்கியமான சிந்தனைகளே ஆரோக்கியமான உடலைத் தீர்மானிக்கின்றன. இந்த எளிய ஆனால் ஆழமான சித்தர்களின் உணவு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம், மருந்து மாத்திரைகள் இன்றி நீண்ட காலம் நோயற்ற வாழ்வை நாம் பெற முடியும்.



### பிஎம் கிசான் திட்டத்தின் 22வது தவணை:

## ரூ.2,000 வரப்போகுது... பயனாளி லிஸ்டில் உங்க பெயர் இருக்கா?

புதுடெல்லி, பிப். 21–

பிஎம் கிசான் திட்டத்தின் கீழ், இதுவரை 21 தவணைகள் அளிக்கப்பட்டுள்ளன. 21வது தவனை நவம்பர் மாதம் வெளியிடப்பட்டது. தற்போது 22வது தவணைக்காக விவ சாயிகள் காத்திருக்கிறார்கள். இது இந்த மாத இறுதியில் அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் விவசாயி களின் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என எதிர்பா ர்க்கப்படுகின்றது. 22வது தவணை குறித்த உறுதியான தேதி இல்லாத நிலையிலும், தவணை கிடைக்கும் முன் விவசாயிகள் செய்ய வேண்டிய சில பணிகள் உள்ளன. பயனாளிகள் அதிகாரப்பூ ர்வ போர்ட்டலில் தங்கள் பெயர்கள் உள்ளனவா என்பதை செக் செய்யலாம். மேலும், தவணைத் தொகை சிக்காமல் கிடைக்க தேவையான அனைத்து பணிகளையும் விவசாயிகள் செய்து முடிக்க வேண்டும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### காது மெழுகு ஒரு பொதுவான பிரச்சனை அல்ல; கவனம்.. அது உயிருக்கு ஆபத்தானது!



காதில் நீர் வடிதல் பிரச்சனை இருந்தால், பலர் அதை ஒரு சளி அறிகுறி என்று நினைக்கிறார்கள். காதில் நீர் நிரம்பியிருந்தால் அல்லது அடிக்கடி காது கேளாமை ஒரு பிரச்சனையாக இருந்தால், பலர் அதை சளியின் அறிகுறி என்று நினைக்கிறார்கள். ஆனால் இந்த வகையான காது கேளாமை எலும்பு உண்ணும் நோய்களுக்கு வழிவகுக்கும் மற்றும் நிரந்தர காது கேளாமை அல்லது மூளை தொற்றுக்கு வழிவகுக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இப்போதெல்லாம், பல வகையான காது பிரச்சினைகள் சுயமாக ஏற்படுத்திய காயங்களால் ஏற்படுகின்றன. காதில் காயம் ஏற்படும்போது அல்லது காதில் தண்ணீர் சேரும்போது, இயர்பட்கள்/சாவிகள்/பாதுகாப்பு ஊசிகளைப் பயன்படுத்துவது காதில் சேதத்தை ஏற்படுத்தும். இது பூஞ்சை தொற்று அல்லது வலிமிகுந்த கொப்புளங்களுக்கு வழிவகுக்கும். காதுக்குள் இதுபோன்ற பொருட்களைப் பயன்படுத்துவது காதுப்பறையை சேதப்படுத்தலாம் அல்லது துளைக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நாள்பட்ட காது நோய்த்தொற்றுகள் மருத்துவ ரீதியாக பாதுகாக்கப்பட்ட காது மற்றும் பாதுகாப்பற்ற காது என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. காதுப்பறையின் நடுவில் ஒரு துளை இருந்தால், காது குளிர்ச்சியாக இருக்கும்போது அல்லது நீந்தும்போது மட்டுமே கசியும். இரண்டாவது பாதுகாப்பற்ற காது, இது மிகவும் ஆபத்தானது, மேலும் இங்கு 'கொலஸ்டீடோமா' எனப்படும் அசாதாரண தோல் வளர்ச்சி ஏற்படுகிறது. இது புற்றுநோயாக இல்லாவிட்டாலும், அது எலும்பை உண்ணும் பண்புகளைக் கொண்டுள்ளது. கொலஸ்டீடோமா காதுக்குள் இருக்கும் மென்மையான எலும்புகளைத் தின்று மூளையைப் பிரிக்கும் எலும்பின் மெல்லிய அடுக்கை அடையலாம்.

சிகிச்சை அளிக்கப்படாத காது தொற்றுக்கு சிகிச்சையை தாமதப்படுத்துவது இந்த பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்!

முக நரம்பு வாதம்: முக தசைகளின் கட்டுப்பாட்டை இழத்தல்.

மூளை தொற்று (மூளைக்காய்ச்சல்/மூளை சீழ்): தொற்று மூளைக்கு பரவி உயிருக்கு ஆபத்தானது.

நிரந்தர காது கேளாமை: கேட்கும் திறனை முழுமையாக இழத்தல்காதில் இருந்து வெளியேற்றம், துர்நாற்றம் அல்லது காதில் இரத்தம் இருந்தால், உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. மருத்துவரின் ஆலோசனையின் பேரில், உடனடியாக CT அல்லது MRI ஸ்கேன் செய்யப்படுகிறது. தேவைப்பட்டால், அறுவை சிகிச்சை செய்வது நல்லது. ஆனால் கடைகளில் கிடைக்கும் காது சொட்டுகள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் தயவுசெய்து அவ்வாறு செய்ய வேண்டாம் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

# ஜனவரி 2026: அரசு ஊழியர்களுக்கு டிஏ/சம்பள உயர்வு எவ்வளவு?அறிவிப்பு எப்போது?

சென்னை, பிப். 22–

வழக்கமாக, ஜனவரி மாதத்திற்கான அகவிலைப்படி அதிகரிப்பு பற்றிய அறிவிப்பு மார்ச் மாதத்தில் ஹோலி பண்டிகையை ஒட்டி வெளியிடப்படும். இந்த ஆண்டு மார்ச் 3, 2026 அன்று ஹோலி பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. ஆகையால், அதற்கு முன்னதாக, ஹோலி பரிசாக டிஏ உயர்வு பற்றி அறிவிக்கப்படும் என நம்பப்படுகின்றது.



**அகவிலைப்படி அதிகரிப்பு**

பொதுவாக, பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை இந்த விஷயத்தில் முடிவு செய்த பிறகு, அகவிலைப்படி உயர்வு குறித்த அதிகாரப்பூர்வ அறிக்கையை PIB வெளியிடுகிறது.

இன்றைய நிலையில், ஜனவரி 2026 க்கான அகவிலைப்படி உயர்வு எப்போது அறிவிக்கப்படும் என்பது அரசாங்கத்தைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்பதுதான் நிதர்சமனான உண்மை என்றாலும், ஹோலிக்கு முன் அறிவிப்பு சாத்தியமா என்பதைப் புரிந்துகொள்ள கடந்த நான்கு ஆண்டுகளின் முதல் அகவிலைப்படி உயர்வு அறிவிப்பு தேதிகளைப் பார்த்தால் ஒரு தெளிவு கிடைக்கும். 2022, 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் ஹோலி பண்டிகை கொண்டாடப்பட்ட தேதியையும் டிஏ உயர்வு பற்றி அரசாங்கத்தின் பத்திரிகை தகவல் பணியகம் (PIB) வெளியிட்ட அதிகாரப்பூர்வ செய்திக்குறிப்புகளின் தேதியையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சுவாரஸ்யமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் ஹோலிக்கு முன்பு ஒரு முறைமட்டுமே அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 2024 ஆம் ஆண்டில் மட்டும், ஹோலி பண்டிகை மார்ச் 25 அன்று இருந்தது, ஆனால் PIB இன் அகவிலைப்படி உயர்வு அறிக்கை, அதற்கு முன்னரே, மார்ச் 7 ஆம் தேதி வெளியிடப்பட்டது. மீதமுள்ள மூன்று ஆண்டுகளில், அகவிலைப்படி உயர்வு முடிவு குறித்த அறிக்கையை PIB ஹோலிக்குப் பிறகுதான் வெளியிட்டது.

**டிஏ உயர்வு எவ்வளவு?**

2025 ஆம் ஆண்டின் 12 மாதங்களுக்கான AICPI–IW தரவுகளின் அடிப்படையில் கணக்கீடு, ஜனவரி 1, 2026 முதல் DA 2% அதிகரிக்கப்படலாம் என்பதைக் காட்டுகிறது. இதன் மூலம் மொத்த அகவிலைப்படி 60% ஆக அதிகரிக்கும். இந்த டிஏ விகிதம் 8வது ஊதியக் குழுவால் ஃபிட்மென்ட் ஃபாக்டர் கணக்கீட்டிற்கான அடிப்படையாகவும் செயல்படக்கூடும்.

**அகவிலை நிவாரணம்:**

மத்திய அரசு ஊழியர்களுக்கான டிஏ உயர்வுடன், மத்திய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு அரசாங்கம் அகவிலை நிவாரணத்தையும் (DR) அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அகவிலை நிவாரணம் வழக்கமாக அகவிலைப்படியின் அதே விகிதங்களில் உயர்த்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அகவிலைப்படி உயர்வு மற்றும் அகவிலை நிவாரண, உயர்வு ஆகிய இரண்டும் 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன.

**Salary Hike: சம்பள உயர்வு எவ்வளவு இருக்கும்?**

8வது ஊதியக்குழுவிற்கு பிறகு மத்திய அரசு ஊழியர்களுக்கு கிடைக்கக்கூடிய சம்பள உயர்வை ஒரு உதாரணத்தின் மூலம் புரிந்துகொள்ளலாம்.

– ஒரு ஊழியரின் அடிப்படை ஊதியம் ரூ.50,000 என வைத்துக்கொள்வோம்.

– தற்போதைய 58 சதவீத அகவிலைப்படி தொகை தோராயமாக ரூ.29,000 ஆக இருக்கும்.

– அகவிலைப்படி 60 சதவீதமாக அதிகரித்தால், அந்த தொகை தோராயமாக ரூ.30,000 ஆக அதிகரிக்கும்.

– அதாவது மாதத்திற்கு சம்பளம் தோராயமாக ரூ.1,000 அதிகமாகும்.

– ஜனவரி மாதம் முதல் அரியர் தொகையும் கிடைக்கும்.

# வேலை வாய்ப்பு

## அக்னிவீர் காலியிடங்கள்–– சென்னை, கோவை, திருச்சி

நிறுவனத்தின் பெயர்: இந்திய ராணுவம் – சென்னை, திருச்சி, கோயம்புத்தூர்

வேலை வகை: மத்திய அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: தற்காலிக அடிப்படை

காலம்: 04 ஆண்டுகள்

பதவிகளின் பெயர்: அக்னிவீர் (பொது பணி), அக்னிவீர் (தொழில்நுட்பம்), அக்னிவீர் (எழுத்தர் / கடை காப்பாளர் தொழில்நுட்பம்), அக்னிவீர் டிரேட்ஸ்மேன் (அனைத்து ஆயுதங்கள்) பதவிகள்

பணியிட இடம்: இந்தியா முழுவதும்

தொடக்க தேதி: 13.02.2026

கடைசி தேதி: 01.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://joinindianarmy.nic.in/

# உங்கள் ரேஷன் கார்டு இனி செயல்படாது..!! பிப்.25 வரை காலக்கெடு..!!




சென்னை, பிப். 21–

தமிழக உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாநிலத்திலுள்ள ஒரு ரேஷன் அட்டையில் பெயர் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தங்களது கைரேகையை (Biometric) பதிவு செய்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் தகுதியான பயனாளிகளுக்குத் தடையின்றிச் சேருவதை உறுதி செய்ய அரசு பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தங்களது கைரேகையை ரேஷன் கடைகளில் உள்ள இயந்திரங்களில் பதிவு செய்ய வேண்டும். இது குறித்த விழிப்புணர்வு மற்றும் அறிவுறுத்தல்கள் தற்போது மாவட்ட வாரியாக அந்தந்த கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்கள் மூலம் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதுவரை கைரேகையைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், வரும் பிப்ரவரி 25–ஆம் தேதிக்குள் தங்கள் குடும்ப அட்டைக்கு உட்பட்ட ரேஷன் கடைகளுக்குச் சென்று இப்பணியை முடிக்க வேண்டும் என அரசு வலியுறுத்தியுள்ளது. இந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கைரேகை சரிபார்ப்பை மேற்கொள்ளாதவர்களின் ரேஷன் அட்டைகள் தற்காலிகமாக முடக்கப்படவோ அல்லது அந்த உறுப்பினர்களுக்கான பொருட்கள் நிறுத்தப்படவோ வாய்ப்புள்ளதாக அரசு வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

# Toll Plaza-வில் புதிய மாற்றம்.. ஏப்ரல் 1 முதல் பணத்தை நீட்டினால் எதுவும் நடக்காது.. FASTag - UPI இனி பிரதானம்!

சென்னை,பிப். 21–

இந்தியா முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச்சாவடிகளில் பணம் செலுத்தும் முறை முழுமையாக நிறுத்தப்பட உள்ளது. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ஏப்ரல் 1, 2026 முதல் அனைத்து சுங்கச்சாவடிகளிலும் பணம் ஏற்கப்படாது என்று அறிவித்துள்ளது. இதன்படி, சுங்கக் கட்டணம் செலுத்த FASTag அல்லது UPI (கூகுள் பே, போன்பே, பேடிஎம் போன்றவை) மூலம் மட்டுமே இனி பேமெண்ட் மேற்கொள்ள முடியும். இந்த மாற்றம் நீண்ட வரிசைகளில் நிற்கும் வாகனங்கள் எண்ணிக்கை குறைக்கவும், போக்குவரத்தை இயக்கத்தை விரைவுபடுத்தவும், பண பரிமாற்றத்தை குறைக்கவும், முழுமையான டிஜிட்டல் முறையை உறுதி செய்யவும் உதவும் என்று அரசு தெரிவித்துள்ளது. சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, கூட்டணி கட்சிகளு டன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த குழு அமைத்தது திமுக. எம்.பி டி.ஆர். பாலு தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைப்பு.




சட்டப்பேரவை தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடு குறித்து திமுக உடன் பேச்சுவார்த்தை நடத்த 4 பேர் கொண்ட குழுவை அமைத்தது மதிமுக. திருச்சியில் நாம் தமிழர் கட்சியின் சார்பில், மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு சீமான் தலைமையில் இன்று நடைபெற உள்ளது. தமிழ்நாட்டின் 234 தொகுதிகளுக்குமான வேட்பாளர்கள் ஒரே மேடையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளனர்.

வடகிழக்கு மாநிலத்தில் உள்ள மாணவர்கள், குறிப்பாக பெண்களுக்கு தமிழ்நாட்டில் படிக்க வாய்ப்பு கிடைத்தால், பெற்றோர்கள் வருத்தம் இல்லாமல் நிம்மதியாக இருக்கிறார்கள் என, தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு குறித்து ஆளுநர் ஆர்.என். ரவி புகழாரம்.

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,080 உயர்ந்துள்ளது.

அதன்படி, கிராமிற்கு ரூ.260 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,680–க்கும் ஒரு சவரன் ரூ.1,17,440–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளியின் விலை கிராமிற்கு ரூ.20 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.290–க்கு விற்பனை. தெற்கு ரயில்வே அறிவிப்பின்படி, உதகை மலை ரயிலின் டிக்கெட் கட்டண உயர்வு இன்று முதல் அமலுக்கு வருகிறது. முதல் வகுப்பு சாதாரண கட்டணம் ரூ.520–ல் இருந்து ரூ.550–ஆகவும், முன்பதிவு முதல் வகுப்பு ரூ.600–ல் இருந்து ரூ.630–ஆகவும் உயர்வு.

## சினிமா துளிகள்..!

### விக்ரமின் சைலண்ட் சம்பவம்... லைன்அப்-ல் 4 படங்கள்!



தமிழ் சினிமாவில் மிகவும் தனித்துவமான நடிகர்களில் ஒருவர் விக்ரம். இவர் கடைசியாக வீர தீர சூரன் படத்தில் நடித்திருந்தார். இப்படம் கலையான விமர்சனங்களை பெற்றது. இந்நிலையில் நடிகர் விக்ரம் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருப்பது ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதில், "சில நேரங்களில் மௌனம் என்பது தயார்படுத்திக்கொள்வது. என்னை ஈர்க்கும் கதைகளுக்காக காத்திருந்தேன். தற்போது நான் பெரிதும் மதிக்கும் நான்கு இயக்குனர்களுடன் புதிய படங்களை துவங்குவதால் மகிழ்ச்சியடைகிறேன். இந்த கதைகள் ஒன்றொன்றும் வித்தியாசமானவை" என தெரிவித்திருக்கிறார்.

விக்ரமின் அடுத்த படத்தை போடி ராஜ்குமார் இயக்கவிருக்கிறார். சாந்தி டாக்கீஸ் சார்பாக அருன் விஸ்வா இந்த படத்தை தயாரிக்க இருக்கிறார். தொடர்ந்து விஷ்ணு எடவன் இயக்கத்தில் நடிக்கிறார். அடுத்தபடியாக இருமுகன் படத்தை இயக்கிய ஆனந்த் சங்கர் இயக்கத்தில் மீண்டும் நடிக்க இருக்கிறார் விக்ரம். இதனைத் தொடர்ந்து மஹான் படத்தைத் தொடர்ந்து மீண்டும் கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் விக்ரம் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.


## தமிழ்நாடு அரசு
# சோழவந்தான் பேரூராட்சி
## மதுரை மாவட்டம்

ந.க.எண்.16/2026 நாள்:17.02.2026

**பொதுநிதி திட்டம் 2025-2026**

**குறுகியகால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

7. சோழவந்தான் பேரூராட்சியில் 2025–2026 ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியினை செய்வதற்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பெற விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பொதுப்பணித்துறையில் அல்லது நெடுஞ்சாலைதுறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும் அல்லது குறிப்பிட்ட பணிகளில் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ்களை உரிய துறை அதிகாரிகளிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
8. இப்பேரூராட்சியில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் மூலம் இணையதளத்தின் வழியாக ஒப்பந்தப்புள்ளிகள் (Online tender) இப்பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது செயல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ வரவேற்கப்படுகின்றன.
9. பணிகளுக்குரிய ஒப்பந்தப்படிவங்களை 17.02.2026ம் தேதி முதல் 26.02.2026ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை E–Token Digital Signature card யை https://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
10. டேவணி தொகையினை பேரூராட்சியின் இந்தியன் ஓவர் சிஸ் வங்கி கணக்கு எண். 288601000005651, IFS Code IOBA0002886 RTGS
11. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 26.02.2026ம் தேதி வியாழக் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திறக்கப்படும்.
12. இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

| வ எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | காப்புத் தொகை (1%) ரூ. | ஒப்பந்தபுள்ளி படிவ கட்டணம் + மதிப்பு கூட்டுவரி ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 1 முதல் 18 வரையுள்ள விரிவாக்க பகுதிகளில் 50 எண்ணம் சோலார் எல்.இ.டி. விளக்கு அமைத்தல் | 2.00 | 2000 | 676 | 3 மாதம் |

(ஒம்) கா.ஜெயராமன், தலைவர், சோழவந்தான் பேரூராட்சி, மதுரை மாவட்டம் .

(ஒம்) ச.செல்வக்குமார், செயல் அலுவலர் (பொ), சோழவந்தான் பேரூராட்சி, மதுரை மாவட்டம் .


வெ.ஆ.எண்: 67/2026/ செ.ம.தொ.அ/ மதுரை/ நாள்: 20.02.26.

"துணிப்பையை கையில் எடுப்போம்" "பிளாஸ்டிக் பையை கைவிடுவோம்"


# தென்கிழக்கு வங்கக்கடலில் உருவானது குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி ...!

டெல்லி, பிப். 21–

வங்கக்கடலில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவானது.




இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடையும். ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்து, தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, இனறு தென் தமிழகத்தில் அநேக இடங்களிலும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஓரிரு இடங்களில் பலத்த காற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

நாளை பிப். 22ல் தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

பிப். 23 முதல் 26 வரை தென் தமிழகம் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881





## பிப்ரவரி 24 ஜெ.பிறந்தநாள்: திருஉருவ சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மரியாதை...!

சென்னை, பிப். 21–

பிப்ரவரி 24ந்தேதி மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, அதிமுக சார்பில் அவரது சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மரியாதை செலுத்துகிறார்.

## அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா!



தேனி, பிப். 21–

தேனி மாவட்டம், பெரிய குளம் வட்டம், சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியர் பாண்டியன் தலைமை வகித்தார். இவ்விழாவில் பள்ளி மாணவ, மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் பாரம்பரிய நடனங்கள் நடைபெற்றது.மேலும் இந்த கலைநிகழ்ச்சி, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது. இவ்விழாவில் பள்ளி உதவி தலைமையாசிரியர் செல்வராஜ், ஆசிரியர்கள் கென்னடி, சக்தி, சுரேஷ், ஜமின்தார், அர்ச்சுனன் மற்றும் பள்ளி மேலாண்மை குழு தலைவர் கனிமொழி, உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்கூடல் விழா!

சிவகங்கை, பிப். 21–

சிவகங்கை மாவட்டம், புழுதிப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்கூடல் விழா நடைபெற்றது விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் ஆ.சலமன்புஷ்பராஜ் தலைமை ஏற்க முதுநிலை தமிழாசிரியர் வி.இராஜா வரவேற்றுப் பேசிட நிலா இலக்கிய மன்றம் தலைவர் கவிக்குயில் இரா.கணேசன் சிறப்பாளராக கலந்து கொண்டு கலைநிகழ்ச்சி மற்றும் பல பேட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார் பட்டதாரி தமிழாசிரியர் பா. சாந்தி விழாவை தொகுத்து வழங்கிட பட்டதாரி தமிழாசிரியர் கா.சாந்தாபேகம் நன்றி கூறினார்.

## அங்கன்வாடி குழந்தைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் விழா!




ராமநாதபுரம், பிப். 21–

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பயிற்சி மையத்தில், பாவை பவுண்டேஷன் சார்பில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் விஸ்பவதி தலைமையில் இராமநாதபுரம் மாவட்ட பாவை பவுண்டேஷன் ஒருங்கிணைப்பாளர் கணகராஜ் முன்னிலையில் அங்கன்வாடி மையங்களுக்கு கற்றல் திறன் மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. குழந்தைகளின் ஆரம்ப கல்வி மற்றும் முழுமையான வளர்ச்சியை கருத்தில் கொண்டு, கற்றல் உபகரணங்களுடன் குழந்தைகளின் உயரத்தை கண்காணிக்கும் அளவீட்டு கருவிகள் அங்கன்வாடி மை யங்களில் பணியாளர்களுக்கு வழங்கப் பட்டது. பயிலும் குழந்தைகளின் அறிவாற்றல் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்த உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் திட்ட அலுவலர்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப்பங்கீட்டு பேச்சுவார்த்தை - டி.ஆர்.பாலு தலைமையில் குழுவை அமைத்தது திமுக!

சென்னை, பிப். 21–

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்காக, கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த திமுக குழு அமைத்துள்ளது.



கடந்த 2021–ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த கட்சிகளில், தி.மு.க. 173. காங்கிரஸ் 25, ம.தி.மு.க. 6, விடுதலை சிறுத்தைகள் கட்சி 6, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு 6, இந்திய கம்யூனிஸ்டு 6, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 3, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி 3, மனிதநேய மக்கள் கட்சி 2, தமிழக வாழ்வுரிமை கட்சி 1, அகில இந்திய பார்வர்டு பிளாக் 1, ஆதி தமிழர் பேரவை 1 என 234 தொகுதிகளிலும் போட்டியிட்டன.

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் கடந்த முறை இடம்பெற்றுள்ள கட்சிகள் தொடர்வதுடன் நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யமும், தே.மு.தி.க–வும் புதிதாக இணைந்துள்ளன.

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள், அதாவது கடந்த முறை 6 தொகுதிகளில் போட்டியிட்ட கட்சிகள் இந்த முறை இரட்டை இலக்க தொகுதிகளை கேட்டு வருகின்றன. தேசிய கட்சியான காங்கிரஸ் 41 தொகுதிகள் உள்பட ஆட்சியிலும் பங்கு கோரி வருகிறது. இதுபோன்ற நெருக்கடியான நிலையில்தான் தி.மு.க கூட்டணியில் நாளை தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை தொடங்கப்பட இருக்கிறது.

இந்நிலையில், 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த திமுக குழு அமைத்துள்ளது. எம்.பி. டி. ஆர்.பாலு தலைமையில் 7 பேர் கொண்ட குழுவை பொதுச்செயலாளர் துரை முருகன் அறிவித்துள்ளார்.

# 22 பேர் கைது விவகாரம்: இலங்கை கடற்படையை கண்டித்து விசைப்படகு மீனவர்கள் வேலைநிறுத்தம்!

ராமேசுவரம், பிப். 21–

ராமேசுவரத்தில் இருந்து கடந்த 18–ந் தேதி 3 விசைப்படகுகளில் மீன்பிடிக்க சென்ற 18 மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதேபோல் மண்டபத்தை சேர்ந்த ஒரு படகில் மீன்பிடிக்க சென்ற 4 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்தனர். இந்த 22 மீனவர்களும் தற்போது இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டு உள்ளனர்.



மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க மத்திய–மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

இந்நிலையில் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிக்க செல்லும் மீனவர்களை தொடர்ந்து கைது செய்து வரும் இலங்கை கடற்படையை கண்டித்து ராமேசுவரத்தில் விசைப் படகுகள் இன்று (சனிக்கிழமை) ஒருநாள் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்படி 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடற்கரையில் நிறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தியும், இலங்கை கடற்படையை கண்டித்தும் தங்கச்சிமடம் வலசை பஸ் நிறுத்தம் அருகே கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்த உள்ளதாக விசைப்படகு மீனவர் சங்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சேசுராஜா தெரிவித்திருந்தார்.

# மேலாடையின்றி போராட்டம்: 4 காங்கிரஸ் தலைவர்கள் கைது- பாஜக-வினர் பதில் போராட்டம்!

புதுடெல்லி,பிப். 21–

டெல்லி ஏ.ஐ. மாநாட்டு பகுதியில் காங்கிரசார் மேலாடையின்றி போராட்டம் நடத்தியதுடன் பிரதமர் மோடிக்கு எதிராக கோஷம் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டுக்கான செயற்கை நுண்ணறிவு மாநாட்டை இந்தியா நடத்தி வருகிறது. இன்றுடன் முடிவடைகிறது. டெல்லி பாரத் மண்டபத்தில் மாநாடு நடைபெற்று வரும் இந்த மாநாட்டின் நேற்றைய நிகழ்ச்சியில் ஸ்பெயின் அதிபர் பெட்ரோ சான்செஸ், கிரீஸ் பிரதமர் கிரிகோஸ், இலங்கை அதிபர் அனுரா குமார திசநாயகே, பூட்டான் பிரதமர் ஷேரிங் டோப்கே உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




இந்நிலையில் டெல்லி பாரத் மண்டப பகுதிக்குள் திடீரென புகுந்த இளைஞர் காங்கிரசார், தங்கள் மேலாடையை கழற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்கா– இந்தியா வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷமிட்டதுடன், பிரதமர் மோடிக்கு எதிராகவும் முழக்கமிட்டனர்.

இந்த நிலையில் காங்கிரஸ் இளைஞர் பிரிவு நடத்திய போராட்டத்திற்கு பாஜக கடும் கண்டனம் தெரிவித்தது. அத்துடன் டெல்லியில் போராட்டம் நடத்தினர்.

பாஜக எம்.பி. மனோஜ் திவாரி "இந்த செயலுக்காக நாட்டு மக்கள் காங்கிரசை மன்னிக்க மாட்டார்கள். 80–க்கும் மேற்பட்ட நாட்டினர் கலந்து கொண்டுள்ளனர். இந்தியாவின் முயற்சியை அவர்கள் பாராட்டியுள்ளனர்" என்றார்.

இதற்கிடையே போராட்டம் நடத்திய 4 பேரை போலீசார் கைது செய்துள்ளனர். அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

# எதிரிக்கு எதிரி நண்பன்: பழைய பார்முலாவை கையில் எடுத்த ஓ.பி.எஸ்.!

சென்னை, பிப். 21–

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை மீண்டும் சந்தித்த ஓ.பன்னீர்செல்வம், தி.மு.க. அரசுக்கு ஆதரவான கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, தனது இன்னொரு மகன் ஜெய பிரதீப்புக்கு தேனி மாவட்டத்தில் உள்ள ஒரு தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட வாய்ப்பு கேட்டதாக கூறப்படுகிறது. தி.மு.க.வுக்கு ஆதரவான நிலைப்பாட்டை ஓ. பன்னீர்செல்வம் எடுத்தபோதும், அவர் சட்டசபை தேர்தலில் போட்டியிடவில்லை என்ற முடிவை எடுத்துள்ளாராம்.

**இந்த முடிவுக்கு என்ன காரணம்?**

அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வந்த ஓ.பன்னீர்செல்வம், அது நிறைவேறாமல் போகவே, சமீபத்தில் வெளிப்படையாகவே, "அ.தி.மு.க.வில் இணைய நான் ரெடி, சேர்த்துக்கொள்ள எடப்பாடி பழனிசாமி ரெடியா?" என்று கேள்வி எழுப்பினார்.

ஆனால், எடப்பாடி பழனிசாமி,



"முடியவே முடியாது" என்று சாதித்துவிட்டார். இனி அ.தி.மு.க.வில் இணைய வாய்ப்பே இல்லை என்பதை உணர்ந்த ஓ.பன்னீர்செல்வமும் ஆதரவாளர்களுடன் கலந்து ஆலோசித்து இந்த முடிவை எடுத்துள்ளாராம்.

**எதிரிக்கு எதிரி நண்பன்**

"எதிரிக்கு எதிரி நண்பன்" என்ற பழைய பார்முலாவை கையில் எடுத்துள்ள அவர், இதன் மூலம் எடப்பாடி பழனிசாமியை பழிவாங்க முடியும் என்று நினைக்கிறாராம்.

தனது அரசியல் வாழ்க்கையில் இத்தனை ஆண்டுகள் அ.தி.மு.க.விலேயே பயணித்து வந்த ஓ.பன்னீர்செல்வம், 1996–ம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலில் பெரியகுளம் நகரமன்ற தலைவராக தேர்வு செய்யப்பட்டார். 2001, 2006 சட்டசபை தேர்தலில் பெரியகுளத்தில் இருந்தும், 2011, 2016, 2021 ஆகிய சட்டசபை தேர்தலில் போடி நாயக்கனூரில் இருந்தும் எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அமைச்சராக இருந்த ஓ.பன்னீர்செல்வம், 3 முறை (2001–2002, 2014–2015, 2016–2017) முதல்–அமைச்சராகவும், 4 ஆண்டுகள் (2017–2021) துணை முதல்–அமைச்சராகவும் இருந்துள்ளார். துணை முதல்–அமைச்சராக இருந்த காலத்தில் கட்சியிலும் ஒருங்கிணைப்பாளர் என்ற முக்கிய பொறுப்பிலும் ஓ.பன்னீர்செல்வம் இருந்தார்.

# யாரு ஹீரோ? கேட்குறாங்களா சொல்லுங்க ஜீ... வெளியானது!

சென்னை, பிப். 21–

45 ஆண்டுகளுக்குப் பிறகு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் உலகநாயகன் கமல்ஹாசன் இணைந்து நடிக்கும் மெகா பட்ஜெட் திரைப்படத்தை இயக்குநர் நெல்சன் இயக்குவது உறுதியாகியுள்ளது. ரெட் ஜெயண்ட் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் ப்ரோமோ வீடியோ ரஜினி மற்றும் கமலின் பிறந்த தேதிகளைக் குறிக்கும் வகையில் நாளை (இன்று) 12:07 மணிக்கு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதனை தொடர்ந்து ரஜினி– கமல் இணையும் புதிய படத்தின் ப்ரோமோ வீடியோ தற்போது வெளியாகி உள்ளது. இப்படத்தை இயக்குநர் நெல்சன்



இயக்குவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அனிருத் இப்படத்திற்கு இசையமைக்க உள்ளார். இப்படத்திற்கு தற்காலிகமாக KHxRK என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

ப்ரோமோ வீடியோவில் ரஜினி, கமல், இயக்குநர் நெல்சன், இசையமைப்பாளர் அனிருத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். வீடியோவில் டீம் மியூசிக் ரெடியா இருக்கு என்று அனிருத் சொல்ல, யாரு ஹீரோ? என்று கமல்ஹாசன் கேட்க, கேட்குறாங்களா சொல்லுங்க ஜீ என்று ரஜினிகாந்த் சொல்ல இயக்குனர் நெல்சனும், அனிருத்தும் செய்வதறியாது திகைக்கின்றனர். இது தொடர்பான ப்ரோமோ வீடியோ ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

நெல்சனின் ஆஸ்தான நடிகர்களான யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி மற்றும் விடிவி கணேஷ் ஆகியோர் நகைச்சுவை வேடங்களில் இடம் பெறுவது கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டுள்ளது.

# பழனி மாரியம்மன் கோவில் திருவிழா; பக்தர்களுக்கு அன்னதானம்!



பழனி, பிப். 21–

பழனி மாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு, கண்பத் கிரேண்ட் அதிபர் என்.ஹரிஹரமுத்து சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

பழனி மாரியம்மன் கோயில் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பழனி வருத்தமில்லா வாலிபர் சங்கம் சார்பில் ஒவ்வொரு நாளும் மாரியம்மனுக்கு அபிஷேகம் அலங்காரம் ஆராதனை செய்யப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நேற்று உபயதாரர் பழனி கண்பத் ஹோட்டல் அதிபர் என்.ஹரிஹரமுத்து சார்பில், பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அன்னதானத்தை பழனி டவுன் இன்ஸ்பெக்டர் மணிமாறன் தொடங்கி வைத்தார். இதில் சரவண பொய்கை கந்த விலாஸ் அதிபரும், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின் மாநில இணை செயலாளருமான என்.பாஸ்கரன், வணிகர் சங்க பேரமைப்பு மாவட்ட தலைவர் ஜே.பி.சரவணன், வருத்தமில்லா வாலிபர் சங்க நிர்வாக தலைவர் எம். முருகானந்தம், சி.வி. செல்வம், பழனிச்சாமி, திமுக கவுன்சிலர் கே.சுரேஷ், வழக்கறிஞர் மணிகண்ணன், முன்னாள் கவுன்சிலர்கள் வி.ஏ.பி.குமார், பேச்சியம்மாள் ரைஸ் மில் அதிபர் சுப்ரமணி, ஐயப்பா மணி, மகாலிங்கம், ஆனந்தகுமார், வணிகர் சங்க பேரமைப்பு கண்ணுச்சாமி, ஜெகதீஷ், ராதாகிருஷ்ணன், ஈஸ்வரமூர்த்தி, கண்ணம்மாள், பழனிச்சாமி, சோலை தேவர், உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்



இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பூசேரி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நடந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு விளக்க கூட்டம்!



திருப்பூர், பிப். 21–

திராவிட முன்னேற்றக் கழக மேற்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு விளக்க கூட்டம் திருப்பூர் வடக்கு மாவட்ட வடக்கு மாநகர அண்ணா காலனி பகுதி கழகத்திற்கு உட்பட்ட 23 வது வார்டு தனியார் திருமண மஹாலில் பகுதி செயலாளர் மின்னல் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது இதில் மேற்கு மண்டல இளைஞர் அணி மாநாட்டில் பெருந்திரளாக கழக நிர்வாகிகள் கலந்து கொள்வது குறித்த ஆலோசனை வழங்கப்பட்டது

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் குணராஜன். முன்னிலை வகித்தார். வார்டு செயலாளர்கள் ராம்குமார். ராஜ்குமார்.செல்வம் வரவேற்புரையாற்றினார்கள் பகுதி பொறுப்பாளர் ஆண்டோ சிறப்புரையாற்றினார் பகுதி இளைஞரணி அமைப்பாளர் அசோக்குமார் நன்றி உரையாற்றினார் ஆலோசனைக் கூட்டத்தில் பகுதி பொருளாளர் பாப்புலர் ரவிக்குமார்.பகுதி பிரதிநிதி குப்புசாமி.பகுதி துணைச் செயலாளர் மகுடபதி.மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் விஜயகுமார். மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் லக்கி ரவிச்சந்திரன்.பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ராயல் ராஜ்குமார். சக்திவேல். யுவராஜ். குணசேகர்.

முருகவாணன். கழக நிர்வாகிகள் குணசேகரன். பத்மநாதன். ஆட்டோ வெங்கடாசலம். சசிகுமார். தமிழரசன். சையது முகமது. நிசார் முகமது உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**தேவை**

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020